26.09.2025

**பல்கலைக்கழக பெண்கள் பளுதூக்கும் போட்டியில்
புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி மாணவி சிறப்பிடம்**

பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான பெண்கள் பளுதூக்கும் போட்டிகள் திருச்சி திருமதி இந்திராகாந்தி பெண்கள் கல்லூரியில் 24.09.2025 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் 77 கிலோ எடைபிரிவில் கலந்து கொண்ட எம்.மேரி ஸாமினி எனும் மூன்றாம் ஆண்டு உடற்கல்வித்துறை மாணவி 160 கிலோ எடைதூக்கி பல்கலைக்கழக அளவில் முதலிடம் பிடித்தார். இவர் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பளுதூக்கும் போட்டியில் கலந்துகொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று இம்மாணவி மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான பளுதூக்கும் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநில அளவிலான போட்டியில் கலந்துகொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக புதுக்கோட்டை ஜெ.ஜெ.கல்லூரி அணியினர் புதுக்கோட்டை மா.மன்னர் கல்லூரி அணியினரை 25-17 என்ற புள்ளி கணக்கில் வென்றனர்.

கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன், கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் மற்றும் உடற்கல்வித்துறைத் தலைவர் முனைவர் கே.ஜெகதீஸ் பாபு ஆகியோர் பாராட்டினர்.